இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

வியாழக்கிழமை 17-10-2024

# பட்டியலின மக்கள் பாதுகாவல் அரசு - 1

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையில் நலத்திட்டங்களைச் செயல்படுத்தாமலும், நடைபெறும் முறைகேடுகளைத் தடுக்காமலும் தி.மு.க. அரசு இருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி சொல்லி இருக்கிறார். திடீரென்று எடப்பாடியாருக்கு இதில் என்ன திடீர் அக்கறை ஏற்பட்டது என்று தெரியவில்லை.

அவரது ஆட்சிக் காலத்தில் ஏராளமான திட்டங்களைத் தீட்டியதாகவும், தி.மு.க.வின் 41 மாத கால ஆட்சியில் ஆதிதிராவிடர் நலத்துறை செயல்படுகிறதா என்ற சந்தேகம் அனைவரிடமும் எழுந்துள்ளதாகவும் எடப்பாடி சொல்லி இருக்கிறார். தானும் ஏதோ செயல்படுகிறேன் என்பதைக் காட்டிக் கொள்வதற்காக இப்படி ஏதாவது ஒரு அறிக்கை உளறலை வெளியிடுவது பழனிசாமியின் பழக்க வழக்கமாக ஆகிவிட்டது.

**மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான தி.மு.க. அரசு, ஒரு கட்சியின் அரசாக இல்லாமல் தமிழினத்தின் அரசாகச் செயல்பட்டு வருகிறது. 'திராவிட மாடல்' அரசாக இதனை நடத்தி வருகிறார் முதலமைச்சர் அவர்கள். ஒரு சமூக நீதி அரசு எப்படிச் செயல்பட வேண்டுமோ அப்படிச் செயல்பட்டு வருவதை நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள். பழனிசாமி இதனை அறியமாட்டார். எந்த சமூக மக்களுக்கும் அநீதி இழைக்காமல் நீதி வழங்கும் அரசாக தி.மு.க. அரசு செயல்பட்டு வருகிறது. அதிலும் குறிப்பாக பட்டியலின மக்களின் பாதுகாவலராக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இயங்கி வருகிறார்கள்.**

★ அண்ணல் அம்பேத்கர் பிறந்த நாளான ஏப்ரல் 14ஆம் நாளை சமத்துவ நாளாக அறிவித்து அன்று அனைவரையும் உறுதி மொழி எடுக்க வைத்தது முதலமைச்சரின் மகத்தான சாதனையாகும்.

**★ கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் ஏழு ஆண்டுகளாக விதி 16 (2), தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் (வன்கொடுமைகள்) தடுப்பு விதிகள் 1995, படி கூட்டப்பட வேண்டிய மாநில அளவிலான விழிப்புணர்வுக் கூட்டம் நடைபெறாமல் இருந்தது. 2013 ஆம் ஆண்டு மட்டும் ஒரு முறை நடந்தது. 16(2) விதியின் படி மேற்படி மாநில விழிப்புணர்வு கமிட்டிக் கூட்டம் ஆண்டுக்கு இருமுறை நடத்தப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. அதனையே அ.தி.மு.க. ஆட்சியில் நடத்தவில்லை.**

பல ஆண்டுகள் இந்தக் கூட்டம் நடக்காமல் இருந்ததைச் சுட்டிக் காட்டி கோவையைச் சேர்ந்த வழக்கறிஞர் என்.பன்னீர்செல்வம் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தார். இந்த வழக்கை எடுத்து நடத்தியவர் வழக்கறிஞர் குமாரதேவன்தான், இன்று ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆணையத்தின் உறுப்பினராக முதலமைச்சரால் நியமிக்கப்பட்டுள்ளார். இப்படி ஒரு வழக்குத் தொடுக்கப்பட்டதும், அவசர அவசரமாக 8.9.2020 அன்று அ.தி.மு.க. ஆட்சியில் கூட்டத்தை நடத்தினார்கள். கூட்டத்தை நாங்கள் நடத்தி விட்டோம் என்று நீதிமன்றத்துக்கு தகவல் அளித்தார்கள். அதை ஏற்றுக் கொண்ட உயர்நீதிமன்ற அமர்வு, ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மற்றும் ஜூலை மாதத்தில் மாநில அளவிலான விழிப்புணர்வுக் கூட்டங்கள் நடத்தப்பட வேண்டும் என்று உத்தரவு பிறப்பித்தது. ஏற்கனவே இருக்கும் விதியைச் சுட்டிக் காட்டி இந்த உத்தரவை நீதிமன்றம் பிறப்பித்தது.

2021 மே மாதம் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. முதலமைச்சராக மு.க.ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்றதும் இந்த விழிப்புணர்வுக் கூட்டத்தை நடத்தினார்கள். ஏழு ஆண்டு காலமாக நடத்தப்படாத கூட்டத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்தான் - முதன்முதலாக நடத்தினார்கள்.

★ தன்னாட்சி அதிகாரம் கொண்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆணையம் உருவாக்கப்பட்டது. மாநில அளவில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் சட்டப்பூர்வ உரிமைகளைப் பாதுகாக்கவும், அவர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கான உரிய ஆலோசனைகளை வழங்கவும் இந்த ஆணையம் உருவாக்கப்பட்டுள்ளது. தினந்தோறும் இந்த அமைப்பு விசாரணைகளை நடத்தி உத்தரவுகளைப் பிறப்பித்து வருகிறது. இந்த ஆணையத்தை பழனிசாமி தனது ஆட்சியில் அமைக்க வில்லை.

★ குடும்பன், பள்ளர், தேவேந்திரகுலத்தார், கடையன், பண்ணாடி, காலாடி, வாதிரியான் ஆகிய ஏழு சமூகங்களையும் ஒன்றாக இணைத்து ஒரே பெயரில் தேவேந்திரகுலத்தார் என்று அழைக்க அரசாணை வெளியிடப்பட்டது.

**★ சாதிவேறுபாடுகளற்ற மயானங்களைப் பயன்பாட்டில் கொண்டிருக்கும் முன்மாதிரி சிற்றூர்களுக்கு ரூ.10 லட்சம் ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது.**

**★ புதிரை வண்ணார் நலவாரியத்தை மேம்படுத்த ரூ.10 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது.**

★ நீதிமன்றங்களில் அண்ணல் அம்பேத்கர் புகைப்படம் அகற்றப்படும் என்ற செய்தி பரவியது. இதனை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடுமையாகக் கண்டித்தார்கள். அம்பேத்கர் படம் இடம் பெற வேண்டும் என்பதை தலைமை நீதிபதியைச் சந்தித்து உறுதிமொழி பெற்றது அரசு.

★ விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் கோரிக்கையை ஏற்று சென்னை அம்பேத்கர் மணிமண்டபத்தில் அண்ணல் சிலையை அமைத்து, திறந்து வைத்தார் முதலமைச்சர் .

**★ திராவிட முன்னேற்றக் கழகத்தின் துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஆ.ராசா அவர்கள், அண்ணல் அம்பேத்கருடைய தேர்ந்தெடுக்கப்பட்ட நூல்களை தமிழில் வாசிக்க வாய்ப்பாக மொழிபெயர்த்து புதுப்பிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார். அந்த கோரிக்கையையும் ஏற்றுக்கொள்ளப்பட்டு தமிழக அரசால் அண்ணலுடைய தேர்ந்தெடுக்கப்பட்ட நூல்கள் செம் பதிப்பாக தமிழில் வெளியிடப்படும் என்று அறிவிப்புச் செய்துள்ளார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்.**

★ 'ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மேம்பாட்டுச் செயல் திட்ட சட்டம் - 2024' என்ற சட்டத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கொண்டு வந்து நிறைவேற்றி இருக்கிறார். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் மேம்பாட்டுக்காக ஒரு செயல் திட்டத்தை தயாரிப்பதற்கு இச்சட்டம் வழி வகை செய்கிறது.


**★ ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்காக தொண்டாற்றி வரும் நபருக்கு ஆண்டுதோறும் டாக்டர். அம்பேத்கர் விருது வழங்கப்பட்டு வருகிறது. இவ்விருதுடன் வழங்கப்படும் பரிசுத் தொகையை ஐந்து லட்சமாக உயர்த்தியது தி.மு.க. அரசு.**

**★ மக்களிடையே தீண்டாமைக்கு எதிரான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக, ஆண்டுதோறும் ஜனவரி மாதம் 24-ஆம் தேதிமுதல் 30-ஆம் தேதி வரை "மனித நேய வாரவிழா" நடத்தப்பட்டு வருகிறது.**

★ வன்கொடுமைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சமூகத்தில் எவ்வித வேறுபாடுமின்றி பிறர் போற்ற வாழவேண்டும் என்ற எண்ணத்தில், கடந்த மூன்று ஆண்டுகளில் 102 நபர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டோருக்கு வழங்கப்படும் தீருதவித் தொகை (Selenium) உயர்த்தப்பட்டு, வழங்கப்பட்டு வருகிறது.

★ வன்முறையால் பாதிக்கப்பட்டோரை சமூக, கண்ணோட்டத்துடன் அணுகி, அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்திட காவல்துறை மற்றும் வருவாய்த் துறை அலுவலர்களுக்கு விழிப்புணர்வுப் பயிற்சிகள் ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் அண்ணா பணியாளர் நிர்வாக கல்லூரியின் மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

**- தொடரும்**



முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, நேற்று முன்தினம் (15.10.2024) துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டட வளாகத்தில் உள்ள ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தினைப் பார்வையிட்டு, மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் கட்டுப்பாட்டு அறையில் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். இந்நிகழ்வின்போது இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மேயர் ஆர்.பிரியா, மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.




சாம்சங் தொழிலாளர்கள் 9–9– 2024 அன்று முதல் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் நிலையில், இந்தப் போராட்டத்தை விரைவில் பேச்சுவார்த்தை மூலமாக தீர்க்குமாறு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியிருந்தார்கள். இதன்படி நேற்று முன்தினம் (15.10.2024) பொதுப்பணிகள் நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, சிறு, குறு, நடுத்தரதொழில்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், தொழிலாளர் நலன்திறன்மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ.கணேசன், தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா ஆகியோரின் தலைமையில் பல்வேறு துறைகளின் அரசு அலுவலர்கள் இருதரப்பினரிடமும் பல்வேறு நிலைகளில் பேச்சுவார்த்தைகளை நடத்தினார்கள். இப்பேச்சு வார்த்தையின் பயனாக சாம்சங் நிர்வாகம், தொழிலாளர்களின் நலனைக் கருதி பல்வேறு நலத்திட்டங்கள் அறிவித்தது. தொழிலாளர்கள் தங்கள் போராட்டத்தை வாபஸ் பெற்று பணிக்குத் திரும்புவதாக அறிவித்தனர்.

### சாம்சங் தொழிலாளர் பிரச்சினைக்குத் தீர்வு – போராட்டம் வாபஸ்!

# கழக அரசு தொழிலாளர் நலன் காக்க தொடர்ந்து துணை நிற்கும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!

**சென்னை, அக். 17-**

**திருப்பெரும்புதூரில் அமைந்துள்ள சாம்சங் நிறுவனத்தில் கடந்த ஒருமாதத்திற்கும் மேலாக நடைபெற்றுவந்த தொழிலாளர்கள் மற்றும் நிர்வாகத்தினரிடையேயான பிரச்சினைக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி நேற்று முன்தினம் (15-10-2024) ஒரு இணக்கமான தீர்வு காணப்பட்டுள்ளது. தொழிலாளர் நலன் காப்பதில் கழக அரசு எப்போதும் துணை நிற்கும் என முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.**

தொழிலாளர்களின் சம்பள உயர்வு, வேலைநிறுத்தம், சில விடுப்பு சலுகைகள், தொழிற்சங்கத்தைப் பதிவு செய்வது போன்ற பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி இந்த வேலைநிறுத்தப் போராட்டம் குறித்து கவனம் செலுத்தி அதனை விரைவில் முடிவுக்கு கொண்டுவரவேண்டுமென்று தொழிலாளர் நலத்துறைக்கும், தொழில் துறைக்கும் முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியிருந்தார்.

இப்பிரச்சனையை தீர்ப்பதற்கு உறுதுணையாக இருந்து ஒத்துழைத்த சிஐடியு தொழிற்சங்க நிர்வாகிகளுக்கும், அனைத்து தொழிலாளர்களுக்கும், சாம்சங் நிறுவனத்தின் நிர்வாகிகளுக்கும் பாராட்டுகளையும், நன்றியையும் முதலமைச்சர் அவர்கள் தெரிவித்துக் கொண்டார். மேலும் பல கட்ட பேச்சுவார்த்தைகள் நடத்தி இதனை நல்ல முடிவுக்கு கொண்டுவர சிறப்பான முயற்சிகளை மேற்கொண்ட அமைச்சர் பெருமக்கள் எ.வ.வேலு, தா.மோ.அன்பரசன், சி.வி.கணேசன், டி.ஆர்.பி.ராஜா ஆகியோருக்கும் பாராட்டுகளையும் நன்றியினையும் முதலமைச்சர் அவர்கள் தெரிவித்துக் கொண்டார்.

தமிழ்நாடு அரசு எப்பொழுதும் தொழிலாளர் நலனிலும், அவர்களது உரிமைகளைப் பாதுகாப்பதிலும் அக்கறையோடு செயல்படுவதை முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது. தமிழ்நாட்டின் படித்த இளைஞர்களுக்கு பெருமளவில் வேலைவாய்ப்புகள் பெருகவேண்டும், தமிழ்நாட்டில் தொழில்வளம் சிறந்து விளங்கி, நம்மக்கள் சிறந்த வாழ்வு வாழவேண்டும் என்பதையே நோக்கமாகக் கொண்டு இந்த அரசு செயல்பட்டு வருகிறது. தொழில் வளங்களை உருவாக்குவதில் முதுகெலும்பாக விளங்கும் தொழிலாளர்களின் உரிமைகளையும் அவர்களது நலன்களை போற்றிப் பாதுகாப்பதிலும் ஒருபோதும் பின்வாங்காமல் இந்த அரசு செயல்படும். அந்தவகையில் இந்த அரசு மேற் கொண்ட தீவிரமான முயற்சிகளின் காரணமாக தொழிலாளர்களின் தரப்பில் வலியுறுத்தப்பட்ட பல முக்கியமான கோரிக்கைகள் சாம்சங் நிறுவனத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதுமட்டுமின்றி இரு தரப்பிலும் நல்ல எண்ணங்களையும் நல்ல உறவுகளையும் ஏற்படுத்தும் வகையில் அவர்களிடையே ஒரு உடன்படிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது.

இந்தியாவிலேயே தொழில் அமைதிக்கு ஒரு சிறந்த உதாரணமாகத் திகழும் தமிழ்நாடு தொடர்ந்து அந்த நற்பெயரை நிச்சயம் தக்கவைக்கும். அதற்கான முயற்சிகளை இந்த அரசு தொடர்ந்து மேற்கொள்ளும். தொழிலாளர் நலன் காக்கவேண்டும், தொழில்வளம் பெருக வேண்டும் என்ற இரண்டு நோக்கங்களை தனது இரண்டு கண்களாகப் பாவித்து தமிழ்நாடு அரசு தொடர்ந்து செயல்படும். இந்த பிரச்சினை நடந்துகொண்டிருந்த ஒருமாத காலத்தில் பல்வேறு அமைப்புகள் பல தேவையற்ற கருத்துகளை முன்வைத்து இதனை அரசியலாக்கக் காத்திருந்த நிலையிலும், முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின்படி அதற்கெல்லாம் பதில் சொல்வதைத் தவிர்த்து, பிரச்சனைக்குத் தீர்வு காணும் வழியினை மட்டுமே ஆராய்ந்து அதனை தமிழ்நாடு அரசு இன்று நிறைவேற்றிக் காட்டியுள்ளது.

தமிழ்நாடு தனது வளர்ச்சிப் பாதையில் தொடர்ந்து பயணிக்கும்; தொழிலாளர் நலன் காண தொடர்ந்து உறுதுணையாய் நிற்கும்!

# பல்கலைக் கழகத்தில் அமைச்சர் திடீர் ஆய்வு!



கோவை பாரதியார் பல்கலைக்கழக விழாவில் முனைவர் பட்டம் பெற்ற மாணவர் அளித்த புகார் குறித்து உயர் கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியனை நிருபர்கள் கேட்டபோது, "புகார் குறித்து முழுமையாக ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும்" என தெரிவித்தார். இதையடுத்து, அமைச்சர் பல்கலைக்கழக வளாகத்தில் இருந்த ஆராய்ச்சி படிப்பு மாணவர்கள் தங்கும் விடுதிக்குச் சென்று திடீர் ஆய்வு செய்தார். விடுதி மாணவர்களிடம் குறைகளைக் கேட்டறிந்தார். தொடர்ந்து மாணவர்களுக்கு வழங்கப்படும் உணவின் தரம் குறித்து அமைச்சர் உணவை சாப்பிட்டுப் பார்த்து ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது கூடுதல் தலைமைச் செயலாளர் கோபால் மற்றும் பல்கலைக்கழக அதிகாரிகள் உடன் இருந்தனர்.